Rs-20

உ சிவ மயம்.

ஓம் தத் சத் பரப் பிரஹ்மணே நம.

சதுர்த் தச வித்யாப் பிரகாசிகை.

(பன் னுன்கு கல்வி விளக்கம்)

இது,

1. திரி பாஷா பண்டித மணி, 2. சதுர் வித சக்த சாகரர், 3. பரசமய பஞ்சானனர், 4. உபய பாஷா வேதாந்த பிரவர்த்தகாச்சாரியர், 5. மண்டலேசுவரர், 6. திருக்களர், ஸ்ரீ வீர சேகர ஞான தேசிகர் மாணுக்கர், 7. திருப் பூ வண, வேதாந்த மட ஸ்தாபகர், 8. சத சாஸ்திர கர்த்தா, ஸ்ரீ காசிகானந்த ஞானாச்சார்ய ஸ்வாமிகள் இயற்றியது.

மதுரை, V. சுப்புராயலு நாயுடு பிரசில்,
திருப் பூ வணம், வேதாந்த மடத்தாரால்,
அச்சிடப்பட்டது.

காபிரைட்.] 1965. [விலை 35 பைசா.

உ சிவ மயம்.

இராம நாத புரம் ஜில்லா, திருப் பூ வணம், வேதாந்த மடம்,

ஸ்ரீ காசிகாநந்த ஞாநாச்சார்ய ஸ்வாமிகள் இயற்றியன. அச்சிட்டன.

காசிகாநந்த நூற் கொத்து பெட்டி 1க்கு வால்யும் 41.

No	புத்தகப் பெயர்.	ரூ.	பைசா.
1	வேதாந்த சாஸ்த்திர ரத்நாவலி 9 சேர்ந்தது கவி 1132.	3	00
2	கீதாத் திரயம், பகவற் கீதை கவி 545. ஈசுவர கீதை கவி 338, பிரஹ்ம கீதை கவி 547 மூன்று சேர்ந்தது கவி 1430.	3	00
3	வேதாந்த சாஸ்திர ரத்நத் திரயம், விவேக சூடாமணி கவி 671. அஞ்ஞ வதைப் பரணி கவி 494. பஞ்ச தசி கவி 796. மூன்று சேர்ந்து கவி 1961.	3	00
4	வேதாந்த பதார்த்த மஞ்ஜுஷா, வசநம், ஹிந்தி மொழி பெயர்ப்பு.	2	50
5	விசார சாகரம். வசநம். ஹிந்தி மொழி பெயர்ப்பு.	2	25
6	கதா சரித் சாகரம், கதை. சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு.	2	25
7	நாநா ஜீவ வாதக் கட்டளை, சத்தியார்த்தப் பிரகாசிகை உரை.	2	00
8	கீதா சாரத் தாலாட்டு, லகு சந்திரிகை உரை.	2	00
9	மேற்படி நக்ஷத்திர விளக்க உரை.	0	25
10	சசிவந்ந போதம், பதார்த்த பாஸ்கரன் உரை.	2	00
11	மகா ராஜத் துறவு, மநப் பிரசாதிநி உரை.	2	00
12	பக்தி (வைராக்ய) சதக, பத உரை, பொழிப் புரை.	1	50
13	மேற்படி உரை உதாரணக் கவி 103 க்கு பக்தி ரச உரை.	1	00
14	கைவல்ய நவநீதம், உரை உதாரணக் கவி 233 க்கு ஆதித்தன் உரை.	2	50
15	ஹரி மீடே—ஹரி தத்வ முக்தாவலி, பத உரை. வசநம்.	0	75

உ

சிவ மயம்.

ஓம் தத் சத் பரப் பிரஹ்மணே நம.

சதுர்த் தச வித்தியாப் பிரகாசிகை.

(பன் னுன்கு கலை விளக்கம்.)

★

இது,

(பல நூல்களி லிருந்து திரட்டி எழுதியது.)

—:o:—

ஸ்ரீ காசிகாநந்த ஞாநாச்சார்ய ஸ்வாமிகள்

இயற்றியது.

———

விஷய அட்டவணை.

1 வேதம். ரிக், யஜுர், சாமம், அதர்வணம், நான்கு.
2 உபவேதம், ஆயுர் வேதம், தநுர் வேதம், கந்தர்வ வேதம், அர்த்த வேதம். நான்கு.
3 நீதி சாஸ்திரம், அசுவ சாஸ்திரம், கஜ சாஸ்திரம், சில்ப சாஸ்திரம், பாக சாஸ்திரம, அறு பத்து நாலு கலா சாஸ்திரம், எனப் பல விதம் ஆம்.
4 சைவ ஆகமங்களில், அறு பத்து நான்கு கலை ஞானங்கள் கூறப் படுவன.
5 சிக்ஷை வியாகரணம் நிருக்தம் சந்தஸ் ஜோதிஷம் கற்பம் 6.
6 நியாயம், பிராசீநம் நவீநம என 2
7 பிராசீநம் நியாய சாஸ்திரம்.
8 நவீநம், வைசேஷிக சாஸ்திரம்.
9 மீமாம்சை, பூர்வ மீமாமசை, உத்தர மீமாம்சை 2.
10 பூர்வ மீமாம்சை ஜைமினி செய்தது.
11 தியேய பிரஹ்ம விசார மீமாம்சை ஜைமினி செய்தது.
ஜைமினி 16 அத்தியாயம் செய்தார்.
12 இதனை, வியாசர் செய்தார் என்று வேதாந்த சூடாமணி கூறுகிறது.
13 உத்தர மீமாம்சை (ஞேயப் பிரஹ்ம விசார மீமாம்சை.)
இதற்கு வியாசர் கர்த்தா,
14 நிரீசுவர சாங்கிய சாஸ்திரம கபிலர் செய்தார்.
15 ஈசுவர கிருஷ்ணர் சாங்கிய காரிகை செய்தார்.
16 பதஞ்சலி முனிவர் யோக சாஸ்திரம் செய்தார்.
(யோகம்—மந்திர யோகம், லய யோகம், அட யோகம், பாவ யோகம், அபாவ யோகம், ராஜ யோகம் என 6
17 புராணம் 18. ஐந்து தேவதைகளைக் கூறுவது.
18 உப புராணம் 18. 19 உப புராண உப புராணம் 18.
20 இதிகாசம் 1 பாரதம் 2 ராமாயணம் 3 சிவ ரஹஸ்யம் 4 பக்த விலாசம் 5 பக்த லீலாமிருதம் 6 சங்கர திக் விஜயம்.
21 அறு பத்து நான்கு கலா—
22 ஸ்மிருதி 28.
(ஸ்மார்த்த கர்மம் பக்தி ஞானங்களை கூறுவன.)

விஷய அட்டவணை.

ஸ்ரீ ஜகத் குரு சங்கராச்சாரியர் செய்தது.

1 ஈசாவாஸ்ய உபநிஷத் பாஷ்யம். 2 கேந உபநிஷத் பாஷ்யம்.
3 கட உபநிஷத் பாஷ்யம். 4 பிரசிந உபநிஷத் பாஷ்யம்.
5 முண்டக உபநிஷத் பாஷ்யம்.
6 மாண்டூக்ய உபநிஷத் பாஷ்யம்.
7 ஐதரேய உபநிஷத் பாஷ்யம்.
8 தைத்திரீய உபநிஷத் பாஷ்யம்.
9 சாந்தோக்கிய உபநிஷத் பாஷ்யம்.
10 பிரக தாரணியக உபநிஷத் பாஷ்யம்.
11 பகவற் கீதை பாஷ்யம்.
12 நரசிம்ம பூர்வ தாபநீய உபநிஷத், உத்தர தாபநீய உபநிஷத் [பாஷ்யம்.
13 விஷ்ணு சகஸ்ர நாம பாஷ்யம். 14 ஜகத் சுஜாதிய பாஷ்யம்.
15 அஸ்தாபலக பாஷ்யம். 16 லலிதா திரி சதி பாஷ்யம்.
17 1—33 வேதாந்த நூல்
18 1—66, 1 சிவ, 2 விஷ்ணு, 3 தேவி, 4 காலபைரவர், 5 கங்கை, 6 யமுனை, 7 நர்மதை, 8 மணிகர்ணிகா தேவதை, நதி ஸ்தோத்திரங்கள்.
19 ராஜ ராஜேசுவரி ஸ்ரீ சக்கர விஷய மாகப் பிரபஞ்ச சாரம் என ஒரு நூலும், ஆக 117 நூல் செய்திருக்கிறார்கள்

ஸ்ரீ அப்பய தீக்ஷிதர் 1—104 உரையும் மூலமு மாக நூல், 1004 நூல்கள் செய்திருக்கின்றார்கள்.

ஸ்ரீ காசிகாநந்த ஞாநாச்சார்ய ஸ்வாமிகள்.

1 தமிழ் உரை நூல். 20
2 சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு நூல். 25
3 ஹிந்தி மொழி பெயர்ப்பு. நூல் 3
4 தமிழில் எழுதிய நூல். 20 5 கண்டந நூல். 5
6 அறு வகை தெய்வ ஸ்தோத்திரம். 27 கவி. 306

ஆக வகை ஆறுக்கு நூல் 100

22. 20. 2. 6. ஆக 50 பிரிவினை உடையது.

விஷய அட்டவணை முற்றும்.

தொடக்க உரை.

மலர் தலை உலகில், மாநுடர் விரும்புவது, அவரோஹணம் மார்க்கம், பிரவிருத்தி மார்க்கம் என்றும், ஆரோஹணம் மார்க்கம், நிவிருத்தி மார்க்கம் என்றும், இரு மார்க்கங்களே யாகும். அவரோஹணம் மேலிருந்து கீழ் இறங்குதல் ஆகும்.

அம் மாதிரி யாக பிரஹ்ம சைதந்ய மாக இருந்த மநுடன், சரீரத் திரய இரு பத்து நான்கு தத்வங்களையும் நான் என்று அபிமானித்து, பிரவிர்த்தி மார்க்கத்தில், பதினான்கு உலகங்களும் சென்று, தத் கால விசிராந்தி அடைகின்றான். மீண்டும் ஜந்மத்தினை அடைந்து உயர்வு தாழ் வான போகங்களை அநுபவித்து அதிருப்த னாக இருக்கின்றான்.

ஆரோஹணம் கீழிருந்து மேல் ஏறுத லாகும். இதனை நிவிர்த்தி மார்க்கம் என்பர். சரீரத் திரய இரு பத்து நான்கு தத்துவங்களும், நான் அன்று என்று நீக்கி, அதிஷ்டான சைதந்ய சொரூபன் நான் என, குருவின் உபதேசத்தால், மகா வாக்கிய விசாரத்தினால், அறிய சர்வ துக்க நிவிர்த்தி பரமாநந்தப் பிராப்தியா யிருப்பதுவே நித்திய திருப்த னாக இருக்கிறான்.

ஒன்று பல ஜந்ம ஏது வாம். ஒன்று ஜந்ம நிவிருத்தி ஏது வாம். இவ் விரண்டு மார்க்கத்தினையும் பதின் நான்கு வித்தைகளும் சாங்கோபாங்க மாகக் கடல் மடை திறந் தன்னப் போதிக்கின்றன.

அவற்றுள், சாரமா யுள்ள நிவிர்த்தி மார்க்கத்தினை, மநுடராய்ப் பிறந்த ஆண் பெண் அனைவரும் அநுஷ்டித்து நித்திய திருப்த ராய் இருக்க வேண்டுமென்று கருதி பதினான்கு வித்தைகளை தடாக ஸ்நாநம் போன்று, சுருக்கமும் இன்றி, விரிவும் இன்றி, நடுத்தர மாக யாவரும் உணர்ந்து அநுபவிக்கும்படி யாக எழுதியிருக்கின்றோம்.

எல்லாரும் படித்து இன் புற்று, இன்ப வுரு வாகு மாறு, இறைவன் திருக் கழலைப் போற்றுகின்றேன்.

ஸ்ரீ காசிகாநந்த ஞாநாச்சார்ய ஸ்வாமிகள்,

வேதாந்த மட ஸ்தாபகர், திருப் பூவணம்.

உ
சிவமயம்.

முகவுரை.

உலகிலே மக்களாகப் பிறந்தவர்கள், சுவை ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐம் புலன்களையும், ஐம் பொறிகளா லுணரும் ஐ யறிவுடையவர்க ளாவார்கள். விலங்கினங்களுள் சில விலங்கினமும், அவ் வாறுணரும் ஐ யறி வுடையன வாகும். எனினும். தக்க இன்ன தகாதன இன்ன என்று பிரித் துணரும் பகுத் துணர்வு மக்களுக் கன்றிப் பிற வுயிர்கட்கு இன் ருகும் என்பது சான்ருேர் முடிபு.

பிற வுயிர்களும், தாம் நுகரும் புலன்களை, இவை நுகரத் தக்கன, இவை நுகரத் தகாதன எனவும், செய்யும் வினைகளையும், இவை செய்யத்தக்கன, இவை செய்யத் தகா தன எனவும், பகுத் துணரு முணர்வு முடையன வாகவுங் காணப்படுகின்றன என்ருலும், அப் பகுத் துணர்வும், இம்மைக் குரிய தாகு மன்றி, மறுமைக் குரிய தாகாது. இம்மையிலும். பொது வாகப் பிரித் துணரு மன்றி மக்கள் போல, சிறப்பாக வுணரு மாற்றலற்ற தாகக் காணப்படும். பொது வாகப் பகுத் துணர்தலும் சிலவற்றைப் பகுத் துணரு மன்றி, எல்லாவற்றையும் பகுத் துணரு மாற்ற லற்ற தாகவுங் காணப்படும். மக்களுக் குரிய பகுத் துணர் வோ, இம்மையிலும். மறுமையிலும். நலந் தருவன இவை தீங்கு தருவன இவை யெனப் பொது வாகவும், சிறப் பாகவும், பிரித் துணரும் ஆற்ற லுடைய தாகும்.

அவ் வாறு, பகுத் துணர்தலே யன்றி, இம்மை மறுமை களில் காணப்படும் நலங்களும், மெய்ந் நலங்க ளாகா. அவை மயக்கத்தால் மெய்ந் நலங்கள் போலத் தோன்று

கின்றன வன்றி, யுண்மையி லவை மெய்ந் நலங்க ளாகா. அந் நலங்கள், பொய்ந் நலங்க ளாக இருத்தலால், மேலும் மேலும் அவாவை யுண்டாக்குதன் மூல மாகத் துன்ப முன்னிலையாகவே ஆகும். ஆனதால், "இம்மை, மறுமை யிரண்டு மின்றி யோர் செம்மையி னிற்பதா" (மணி மேகலை) கிய, "இறுதியி லின்ப" (மணி மேகலை) வீடே மெய்ந் நல மாகும் எனப் பகுத் துணர்தற் குரியது மாகும்.

இப் பகுத் துணர்வினாலேயே, மெய்ப் பொரு ளுணர்ச் சியுங் கை கூடுவ தாகு மாகையால், இத் தகைய பகுத் துணர் வாகிய ஆறுவ துணர்வு, பிற வுயிர்களில் ஒன் றிரண்டற் கிருப்பினும், மக்களுக் கெல்லா முரிய தாய் எல்லாரிடமு மிருந்து மிளிருந் தகுதி யுடைய தாதலின், "மக்க டாமே யாறறி வுயிரே" (தொல் காப்பியம்- பொருள்-மரபியல்) என்பது முதலியவற்றால், தேற்ற மிட் டுக் கூறி, மக்கள் தாம் ஆ றறி வுடைய, ரெனப் பிரித்து விளக்க லாயினர் சான்றோ ரென்க.

அவ் வாறுவ துணர்வு, நன் றாக மிளிர்வதற்கு நூல் களைக் கற்றலே முன்னிலை யாகும். ஆகையால், நூல்க ளெனப் படுபவை, இவை யென, அறித லின்றியமையாத தாகும் என்க.

ஆயின், நூல்க ளெனப்படுபவை யாவை யெனில், அவை வேத முதலிய பதி னான்கு வகை யாக வுள்ளன எனச் சீதா வு நிடத முதலியன கூறுகின்றன.

அவைகளை நன் றாக விளங்கிக் கொள்ளும்படி, இது போது, கோயி லூர், ஸ்ரீ வீர சேகர ஞாந தேசிக சுவாமி யவர்களின் சிறந்த மாணாக்கர்களி லொருவரும், மும் மொழி வல்லுநரும், நூறு நூல்கள் எழுந் துலவுவதற்கு எழுவா யாக வுள்ளவரும், அத்வைத ஸ்தாபந ஞாநாச் சாரிய சுவாமிகளு மாக விளங்கும், திருப் பூ வண வேதாந்த

மடாலயத் தலைவர் ஸ்ரீ காசிகாநந்த ஞாநாச்சாரிய சுவாமி யவர்கள், தொகுத்தும், வகுத்தும், விரித்தும், சுருங்கிய நிலையி னிலவ எழுதி "சதுர்த் தச வித்யாப் பிரகாசிகை" (பதி ஞன்கு கல்வி விளக்கம்) எனப் பெயரிட் டச்சிட்டு வெளிப்படுத்தி யிருக்கிறுர்கள்.

இந் நூல், தன்னை நோக்குவோர்களுக்கு, வேதங்கள் இருக்கு முதலியன வன்றிப் பிறவு முள வெனவும், ஆகமங் களு. மவ் வாறுள்ளன எனவும், ஆ றங்கங்க ளிவை யென வும், நியாய நூல்கள், சாங்கிய நூல்கள், யோக நூல்கள் இவை யெனவும், புராணங்க ளிவை யெனவும், இதிகாசங்க ளிவை யெனவும். விளங்க வைப்பதுடன் இயற்றிய ஆசிரியர்க ளிவர்கள், உரை யாசிரியர்க ளிவர்கள் எனவும், விளங்கச் செய்கின்றது.

ஸ்ரீ வித்யா பற்றியும், தெளிவிப்ப தாகக் காணப்படும். அறு பத்து நான்கு கலைக ளிவை யென விளக்குதலோடு சக்தி சம்பந்த அறு பத்து நான்கு கலைகளைப் பற்றி விளக் குவ தாகவுங் காணப்படும்.

ஆதலால், மெய்ஞ் ஞாந நூல்களையும், பிற நூல்களை யும், கற்கத் தொடங்குபவர்கள் இந் நூலைக் கற்ருல், "கொழுச் சென றவழித் துன ஞூகி யினிது செல்"வது போல், அப் பதி ஞன்கு வகை நூல்களை இனி தாகக் கற் றற் கியலு மென்பதி லைய மில்லை.

இது, பதி ஞன்கு வகை நூல்கட்கு மோர் பாயிரம் போல, மிளிர்கின்ற தென்னல் மிகையாகாது.

இனித், தமிழில் உள்ள தொல் காப்பிய முதலிய நூல் கள், வியாகரணம் என்பதி லடங்கும். அற நூல், காம நூல், பொரு ணூல்களிலு மடங்கும். பிற தொடர்நிலை தொகை நிலைச் செய்யுள்களும், அற நூல், பொரு ணூல், காம நூல்

முதலியவற்றி லடங்கும். பிற மொழி நூல்களும், இவ்வாறே யடங்கும் ஆதலால், எல்லாம் பதி னுன்கு வகை நூல்க ளாகவே முடியு மெனக் காண்க.

இங்ஙனம்,

கோயி லூர் மரபு. பண்டித சித. நாராயண சாமி,
அறு பத்து மூவர் மடம், திரு வை யாறு.

ஸ்ரீ காசிகாநந்த ஞானாச்சார்ய ஸ்வாமிகள்
உபோத்காதம்.

வேதாந்த சூடாமணி.

வேதமொரு நான்குமா றங்கமுநன் னியாம்
மீமாம்சை யொடுமிருதி புராணமும்ஈர் ஏழாம்,
ஓதல்உறும் வித்தைகளாம் அவற்றுள்மீ மாம்சை
உயர்ந்ததாய் ஐநான்கத் தியாயமாய் அருத்த,
பேதம்உற இருகூறும் அவற்றுள்முதல் கூறே
பிறங்கும்அருட் சைமினிசூத் திரூபம் ஆகிப்,
போதும்ஈர் ஆறத்தி யாயம்ஆய்க் கருமப்
பொருள்உணர்த்திப் பூர்வமீ மாம்சைஎனப் படுமால்.

சாற்றியவச் சைமினிசூத் திரத்திற்கு மிக்க
சாபரம்என் றொருபா டியம்புரியப் பட்டது,
ஏற்றமிகும் அம்மீமாம் சைக்குமதம் பாட்டம்
எனஒன் று பட்டாசா ரியனுல்வந் தன் று,
போற்றும்அவன் சீடனு கியபிரபா கரனுல்
புகழ்பிரபா கரம்எனவோர் மதாந்தரநன் கமைய,
ஆற்றியஅச் சாபரபா டியமதற்கு விளங்க
ஆக்கப்பட்டு உலகம்எலாம் அறிந்திடநின் றதுவே. 2

உரைத்தஇரண் டாம்கூறு பிரமம்உரைப் பதனால்
உத்தரமீ மாம்சைஎனப் பட்டருள்கூர் வியாதன்,
தெரித்தசூத் திரவடிவம் ஆகியிரு நான்கத்
தியாயம்ஆம் அவற்றுள்முதல் நான்கத்தி யாயம்,
விரித்தல்உறு தேவதா காண்டம்எனப் பட்டு
விளங்குறுதெய் வதவிலக் கணம்பலபத் திரனால்,
நிரைத்துரைசெய் யப்படுமேல் நான்கத்தி யாயம்
நிகழ்பிரம காண்டம்என வேநிகழ்த்தப் படுமால். 3

அப்பிரம காண்டத்துள் சிவமொடுயிர் ஐக்கியம்
அறைதலால் சங்கரா சாரியனும் குருவால்,
ஒப்பரிய பாடியம்ஒன் றுரைக்கப்பட் டதுபின்
உரைத்ததற்கு விவரணு சாரியன்என் பவனால்,
செப்பரிய விவரணம்ஆக் குறப்பட்ட ததுவே
தெரியின்வே தாந்தநூல் என்றுரைக்கப் படுமால்,
இப்பெரிய வேதாந்த நூற்பொருளின் அகலம்
எங்ஙனம்என் றிடினுரைத்தும் இயம்பியநூன்
முறையே. 4

என்று வேதாந்த சூடாமணியில், பதின் நான்கு வித்தை கூறப்பட்டிருக்கின்றது.

யாக்ஞவல்கியர் 1—3

புராணம், நியாயம், மீமாம்சை, தர்ம சாஸ்திரம், அங்கங்களோடு கூடிய வேதங்கள், வித்தைகட்கும், தர்மத்திற்கும், பதினுன்கு ஸ்தாநங்கள் என்று கூறுகின்றது.

சீதா உபநிஷத், "அதாதோ பிரஹ்ம ஜிஞ்ஞா" என்பதற்கு பின், பதின் நான்கு வித்தைகளைக் கூறுகின்றது.

சக்தி சம்பந்த மான, பிரபஞ்ச சார சார சங்கிரகம் என்று ஒரு நூல், சம்ஸ்கிருதத்தில், கீர்வாணேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள், பிரபஞ்ச சார நூலுக்கு வியாக்யா

நம் போன்று செய்திருக்கின்றார்கள். அதில், எல்லா மந்திரங்களும், மந்திர பொக்கிஷம் போன்றே எழுதப்பட்டிருக்கின்றது. அதனை பார்த்தால் மந்திரங்களைச் சம்சயம் இன்றி உணரலாம்.

ஸ்ரீ சங்கர பகவத் பாதாச்சாரியர் நூல் உரை.

1. விவேக சூடாமணி — ராமப் பிரசாத வர்மா, அந்வய பாவார்த்த பதார்த்த வியாக்யானம்.
2. உபதேச ஸஹஸ்ரீ–ராம தீர்த்தர்–பதயோஜிநி வியாக்யா.
3. அபரோக்ஷாநுபூதி–வித்யாரண்ய–தீபிகை வியாக்யா.
6. ஆத்ம போதம்–பத்ம பாதாச்சாரியர்–வேதாந்த சார வியாக்யானம்.
12. மநீஷா பஞ்சகம் – பால கோபால யதீ – மது மஞ்சரி வியாக்யானம்.
13. அத்வைத பஞ்ச ரத்நம் — பால கிருஷ்ணாநந்த யதி— கிரணாவலி. சதாசிவர் செய்த — காரிகாவலி.
24. விஞ்ஞாந நௌகா — முகுந்த யதி — பத வியாக்யா.
51. சௌந்தரிய லஹரி—லக்ஷ்மீதர தேசிகர்—லக்ஷ்மீதர வியாக்யானம்.
74. கோவிந்தாஷ்டகம்–ஆநந்தகிரி–விவரண வியாக்யானம்.
91. ஷட்பதி ஸ்வத:– சங்கராநந்த தீர்த்தர்— மஞ்ஜரி வியாக்யா.

இதனையும், அந் நூலோடு சேர்த்துப் படிக்கவேண்டும். ஆக 30 நூலுக்கு ஏனையோர் உரை இயற்றியிருக்கின்றனர் என உணர்க.

சிவமயம்

ஓம் தத் சத் பரப் பிரஹ்மணே நம.

சதுர்த் தச வித்தியாப் பிரகாசிகை.

திருக்களர் வீர சேகர குருவின்
திருவடி கமலத்திரம் பணிந்து,
பொருத்தமா யாரும் கண்டுமே களித்துப்
புகழுதற் குரியதன் மையினில்,
அருத்தங்கள் விரிவாய் அமைந்துமே தோன்ற
அரியபன் னான்குவித் தையினைப்,
பொருத்தமாய் எல்லா நூற்களும் விளங்கப்
புகன்றனன் காசிகா நந்தன்,

சதுர்த்தச வித்தியாப் பிரகா சிகைஎனத்
தந்தனன் அதற்குமே நாமம,
விதர்ப்பமில் லாமல் உணரவே வேண்டும்
வேணவா நூலினைக் கொண்டு,
இதர்த்தம தாக நூற்கடல் மூழ்கி
எடுத்தனன் பன்னான்கு மணியைச்,
சதர்த்தம தாக வீரசே கரனற்
றாளிலே அணிந்துபோற் றுதுமே.

மோக்ஷ விருப் புடைய அதிகாரிகள், அப்யசிக்கக் கூடிய வித்தை பதி னான்கு என்று, சாத்திரங்கள் கூறுகின்றன. அவற்றினை எழுது வாம்:-

சீதா உபநிஷத் 5-வது மந்திரம் கூறுகிறபடி. சதுர் தச வித்தைகள் ஆவன:- வேதம் நான்கு: அங்கம் ஆறு: நியாயம் ஒன்று: மீமாம்சை ஒன்று: ஸ்மிருதி ஒன்று: புராணம் ஒன்று: என்பன ஆம். இவற்றுள், தர்மத்தினை யும், பிரஹ்மத்தினையும், பிரதிபாதிப்பன வாய், அபௌரு

ஷேய மாய் உள்ள, பிரமாண வாக்கியம் வேதம் ஆம். அது, நிஷத்-உபநிஷத் என்றும், மந்திர ரூபம்-பிராஹ்மண ரூபம் என்றும் சொல்லப்படும். தர்மம் முதலியவற்றைப் போதிக்கும் பூர்வ பாக மாகிய கர்ம காண்டம் உபாசநா காண்டம் நிஷத் என்றும், பிரஹ்மத்தினைப் போதிக்கும் உத்தர பாக மாகிய ஞாந காண்டம் உபநிஷத் என்றும், பெயர் பெறும். மந்திர பாகம் வியாக்கேய ரூபம் என்றும், பிராஹ்மண பாகம் வியாக்யாந ரூபம் என்றும், பெயர் பெறும். மந்திர பாகம்-அநுஷ்டாந காரண ரூப திரவிய தேவதைகளை அறிவிப்பது ஆம். அது, ரிக் யஜுஸ் சாம என்று மூன்று வகையா யிருக்கும் ''அக்நி மீளே புரோஹிதம்'' என்பதாதி பாதங்களால் கட்டப்பட்டுக், காயத்ரி முதலிய சந்த விசிஷ்டங்கள், ரிக் காம். கீத விசிஷ்ட மாயின், அதுவே, சாமம் ஆம். இவ் விரண்டின் வேறுயது, யஜுஸ் ஆம். ''அக்நீத் அக்நீந் விஹர'' என்ப தாதி சம்போதந (விளி) ரூப மந்திரங்களும், நிகத மந்திரங்களும், யஜுஸில் அடங்கும். பிராஹ்மண பாகம்-அநுஷ்டாந யாகக் கிரியைகள் ஆகிய எல்லாத் தர்மங்களையும் அறிவிப்பது ஆம். அது, விதி மந்திர நாமதேய அர்த்த வாதம் நிஷேதம் உபாக்யாநம் என்று ஆறு பிரகாரம் ஆம். ராஜ ஆஞ்ஞை போன்று, நிஷேதத்தினின்றும் நிவிர்த்தி தர்மத்தினைப் போதிக்கும் வாக்கிய பாகம் விதி ஆம். ஆசாரியர் போன்று, செய்யத் தக்க யாகம் யாக சாதநங்களைப் பிரகாசித்து, யாக சாதந வாக்கிய பாகம் மந்திரம் ஆம். மாதா பிதா போன்று, யாகாதிகளுக்குப் பெய ரிடும் வாக்கிய பாகம் நாமதேயம் ஆம். துதிப்போர் போன்று, திவ்ய அர்த்தத்தினைக் கூறும் வாக்கிய பாகம், அர்த்த வாதம் ஆம். 'ந கலஞ்சநம் பக்ஷயேத்' என்ப தாதி யதேஷ்டாசரணத்தினை நிஷேதிக்கும் வாக்கிய பாகம், நிஷேதம் ஆம். கிளைக் கதைகளைக் கூறும் வாக்கிய பாகம், உபாக்யாநம் ஆம். இவ் வேதம், அநாதி என்றும், பரமேச்வரனுல் உண்டாயது என்றும் கூறுப.

சீதா உபநிஷத் நாலாவது மந்திரத்திலும், முக்திகா உபநிஷத் முதலாவது அத்தியாயம் 11 முதல் 13½ வரை உள்ள மந்திரத்திலும் கூறியபடி வேதம் ‡வியாசாதிகளால், ரிக் சாகை, யஜுர் சாகை. சாந்தோக்கிய சாகை, அதர்வண சாகை முதலிய பேதத்திஞல் விபாகம் செய்யப்பட்டிருக்கின்றது. ரிக் சாகை 21 விதம் ஆம். யஜுஸ் சாகை (101, அல்லது,) 109 விதம் ஆம். சாம சாகை 1000-ம் விதம் ஆம். அதர்வண சாகை (9, அல்லது) 50, விதம் ஆம். ஆகச் சாகை (1131, அல்லது,) 1180 ஆகும். எத்தனை சாகைகள் உண்டோ, அத்தனை உபநிஷத்துக்கள் உண்டு.

ரிக், யஜுஸ், சாம, அதர்வண பேதத்தால், வேதம் நான்குஆம். அள வின்றிய அக்ஷரத்தினை உடைய ஹோதாவின் வேத பாகம், ரிக்கு ஆம் அளவோடு கூடிய அக்ஷர முடைய அத்வரியுவின் வேத பாகம், யஜுஸ் ஆம். ஸ்துதி விசிஷ்ட அள வின்றிய அக்ஷர முடைய உத்காதாவின் வேத பாகம், சாமம் ஆம். அளவும், அளவு இன்றியதும், ஆன, அக்ஷரம் உடைய பிராஹ்மணனது வேத பாகம், அதர்வணம் ஆம்.

840 சாகை யாகிய உபநிஷத் கர்மத்தினைப் பிரதிபாதித்துக், கர்ம காண்டம் என்றும். 232 சாகை யாகிய உபநிஷத், தியேயப் பிரஹ்மத்தினைப் பிரதிபாதித்து, உபாசநா காண்டம் என்றும். 108 சாகை யாகிய உபநிஷத், ஞேயப் பிரஹ்மத்தினைப் பிரதிபாதித்து, ஞாந காண்டம் என்றும் சொல்லப்படும்.

வேதத்திற்கு மாதவாசாரியரும், ராவணனும், மஹீதரரும், பாஷ்யம் இயற்றியிருக்கின்றூர்கள். சௌநகர் அநுக்கிர மணிகையின்படி, ரிக் வேதம் 10 மண்டல மாகவும்,

---

‡ *வி. ஆஸ், வேதத்தினை பிரித்தவர், வியாசர் என்பது வியாச பதம் அறிவிக்கின்றது.*

85 அநுவாகம், 1016 சூக்தங்கள் ஆகவும், இருக்கின்றது. காத்தியாயநர் அநுக்கிரக மணிகையின்படி 8 அஷ்டகமும், 1016 சூக்தங்களும் இருக்கின்றது. யஜுர் வேதம், கிருஷ்ண யஜுஸ் என்றும், சுக்ல யஜுஸ் என்றும், இரு பிரி வுள வாய், 286 அநுவாகங்களும், 1987 பிரகரணங்களும், உள்ள தாய் இருக்கின்றது. (சாம வேதம்) அதர்வண வேதம் 28 காண்டங்கள் 100 அநுவாகம் 760 சூக்தங்க ளாக இருக்கின்றன.

உப வேதம் 4.

உப வேதம் நான்கு. 1. ஆயுர் வேதம், 2. தநுர் வேதம், 3. கந்தர்வ வேதம், 4. அர்த்த வேதம் என ஆம்.

1 ஆயுர் வேதத்திற்குச், சூத்ரம் சாரீரம் ஐந்திரியம் சிகித்சை நிதாநம் விமாநம் கல்ப்பம் சித்தி என எட்டுத் தாநங்கள் இருக்கின்றன

இந்த ஆயுர் வேதம். பிரஹ்ம பிரசாபதி, அசுவிநி குமா ரர்கள். தந்வந்திரி இந்திரன் பரத்வாஜர் ஆத்திரேயர் அக்நி வேசியர் முதலியோர்களால் செய்யப்பட்டது.

சரகர் என்பவரால் சங்கிரகிக்கப்பட்டது. அதனுள் ளேயே சுசுருதர் என்பவரால், பஞ்ச ஸ்தாந வடிவ மான பிரஸ்தாநாந்தரம் செய்யப்பட்டது. இவ்வாறே, வாக்ப்படர் முதலியோராலும் பல விதம் செய்யப்பட்டன. சாஸ்திர பேதம் இன்று.

காம சாஸ்திரமும், ஆயுள் வேதத்தில் அடக்கம். சுசுரு தர் என்பவரால், வாஜிகரணம். என்னும் பெயரிய காம சாஸ்திரம் செய்யப்பட்டது. வாத்ஸ்யாயநரால் ஐந் தத்தி யாய வடிவ காம சாஸ்த்திரம் செய்யப்பட்டிருக்கின்றது. சிகித்சா சாஸ்திரம், ரோகம், அதன் சாதநம். ரோக நிவிர்த்தி அதன் சாதநம் கூறுகின்றது.

2. தநுர் வேதம் விசுவாமித்திரரால் செய்யப்பட் டது. நான்கு பாத வடிவம் ஆனது. முதல், தீக்ஷா பாதம் 2. சங்கிரக பாதம் 3. சித்தி பாதம் 4. பிரயோக பாதம் ஆம்.

முதல் பாதத்தில், தநுவின் லக்ஷணம், அதிகாரி நிருபணம் செய்யப்பட்டிருக்கின்றது. தநு என்னும் சப்தம் வில்லில் ரூட மாயினும், நான்கு வித ஆயுத வாசக மாக இருக்கின் றது. அவை, முக்தம், அமுக்தம், முக்தாமுக்தம், யந்திர முக்தம், என நான் காம். சக்கிரம் முதலியன, முக்தம் ஆம். கட்கம் முதலியன, அமுக்தம் ஆம். சல்லிய அவாந்தர பேத முதலியன முக்தாமுக்தம் ஆம். சர முதலியன யந்திர முத் தம் ஆம். முக்தம் அஸ்திரம் என்றும், அமுக்தம் சஸ்த்திரம் என்றும், சொல்லப்படும். அது, பிராஹ்ம வைஷ்ணவ பாசுபத பிராஜாபத்ய ஆக்நேயம் முதலிய பேதத்தால் அநேக விதம் ஆம் அதிதெய்வங்களோடும், மந்திரங்களோடும், கூடிய நான்கு வித ஆயுதங்களிலும், எந்த க்ஷத்திரிய, க்ஷத்திரிய குமாரர்கட்கும், அவர் அநுயாயிகட்கும், அதி காரம் உண்டோ, அவர் யாவரும், பதாதி ரத கஜ துரங்க ஆரூடர் என நான்கு வகையினர் ஆவர். தீக்ஷை அபி ஷேகம் சகுநம் மங்கல கரணம் முதலியன எல்லாம் முதல் பாதத்தில் நிருபிக்கப்பட்டன.

இரண்டாவது பாதத்தில், சகல சஸ்திர விசேஷணங்க ளுடைய சங்கிரகணப் பிரகாரம், ஆசாரியருடைய லக்ஷண வாயி லாகத் தரிசிப்பிக்கப்பட்டது.

மூன்றாவது பாதத்தில், குரு சம்பிரதாய சித்த சஸ்திர விசேஷங்களி னுடைய அடிக் கடி அப்பியாசமும், மந்திர தேவதைகளின் சித்தி கரணமும், நிருபிக்கப்பட்டன.

நான் காவது பாதத்தில், இவ் வண்ணம் தேவதை அர்ச்சந அப்பியாச முதலியவற்றால் சித்த மான அஸ்திர விசேஷங்களி னுடைய பிரயோகம் நிருபிக்கப்பட்டது.

க்ஷத்திரியர்க ளுடைய ஸ்வ தர்ம ஆசரணம் யுத்தம். துஷ்ட சத்துரு சோராதிகளினின்றும் பிரஜா பாலநம் செய்

தல், தநுர் வேதத்திற்குப் பிரயோசநம் என இவ் வண்ணம் பிரஹ்மப் பிராஜாபத்தியாதிக் கிரமத்தினுல், விசுவாமித்திரரால் செய்யப்பட்டது, தநுர் வேத சாஸ்திரம் ஆம்.

3. கந்தர்வ வேதம் பரதரால் செய்யப்பட்டது. அதில், நிருத்திய கீத வாத்திய பேதத்தால், அநேக வித அர்த்தம் விசாரிக்கப்பட்டிருக்கின்றன. தேவதா ஆராதநமும், நிர்விகல்ப சமாதி ஆதி சித்தியும், காந்தர்வ வேதத்தின் உடைய பிரயோசந மாம்.

4. அர்த்த சாஸ்திரமும், நீதி சாஸ்திரம், அசுவ சாஸ்திரம், கஜ சாத்திரம் சில்ப சாஸ்திரம், பாக சாஸ்திரம், அறு பத்து நான்கு கலா சாஸ்திரம் எனப் பல விதம் ஆம்.

சைவ ஆகமங்களில், கூறப்பட்ட அவ் வறு பத்து நான்கு கலை ஞாநங்கள் ஆவன. கீதம் 1, வாத்யம் 2, நிருத்யம் 3, நாட்டியம் 4, ஆலேக்யம் 5, விசேஷ கச்சேத்தியம் 6, தண்டுல குசும்பலி விகாரங்கள் 7, புஷ்பாஸ்தரணம் 8, தசந வசநாங்க ராகங்கள் 9, மணி பூமிகா கர்மம் 10, சயந ரசநம் 11, உதக வாத்யம் 12, உதக வாதம் 13, அத்புத தர்சந வேதிக்வம் 14, மாலாக்ர தந கல்ப்பம் 15, சேகரா பீட யோஜநம் 16, நேபத்ய யோகங்கள் 17, கர்ண பத்ர பங்கங்கள் 18, கந்த யுக்தி 19, பூஷண யோஜநம் 20, இந்திர ஜாலம் 21, கௌசுமார யோகங்கள் 22, அஸ்த லாகவம் 23, சித்ர சாகா பூப பக்த விகாரக் கிரியைகள் 24, பாநக் ரச ராகாசவ யோஜநம் 25, சூசீ வாப கர்மம் 26, சூத்ரக் கிரீடை 27. வீணு டமருக வாத்தியங்கள் 28 பிரகேலிகாப் பிரதிமாலைகள் 29. துர்வஞ்சக யோகங்கள் 30, புஸ்தக வாசநம் 31, நாடிகாக்யா தர்சநம் 32, காவ்ய சமஸ்யா பூர்ணம் 33, பட்டிகா வேத்ர பாண விகல்ப்பங்கள் 34. தர்க்கு கர்மங்கள் 35, தக்ஷணம் 36, வாஸ்தா து வித்தை 37, ரூப்ய ரத்நப் பரீக்ஷை 38, தாது வாதம் 39, மணி ராக ஞாநம் 40,

ஆகர ஞானம் 41, விருக்ஷாயுர்வேத யோகங்கள் 42, மேஷ குக்குட லாகவ யுத்த விதி 43, சுக சாரிகாப் பிரலாபநம் 44, உத சாதநம் 45, கேச மார்ஜந கௌசலம் 46, அக்ஷர முஷ்டி சாதநம் 47, மிலேசித கவி கல்ப்பங்கள் 48, தேச பாஷா ஞானம் 49, புஷ்ப சகடிகா நிமித்த ஞானம் 50, யந்திர மாதிருகா 51, தரண மாதிருகா 52, அசம் வாச்சிய சம்பாட்டியமான மூகாவ்யக் கிரியா விகல்ப்பங்கள் 53, சலிதக யோகங்கள் 54, அபிதாந கோச சந்தோ ஞானம் 55, கிரியா விகல்ப்பங்கள் 56, லலித விகல்ப்பங்கள் 57, வஸ்திர கோபநங்கள் 58, த்யூத விசேஷம் 59, ஆகர்ஷக் கிரீடை 60, பாலக் கிரீடநங்கள் 61, வைநாயகீ வித்யா ஞானம் 62, வைஜயிக வித்யா ஞானம் 63, வைதலிகீ வித்யா ஞானம் 64, என்பன ஆம். இவை நாநா முநிகளால் செய்யப்பட்டன.

2. அங்கம் 6.

ஆறு அங்கம் — 1. சிக்ஷை, 2. வியாகரணம், 3. நிருக்தம், 4. சந்தஸ், 5. ஜோதிஷம், 6. கல்பம் என்பன ஆம்.

1. சிக்ஷை என்பது, பாணிநி முநிவரால் "இனிச் சிக்ஷையை இயம்புகின்றேன்" என்பதை ஆதியாக, "சம்பவதீ தநாநி" என்பதை அந்தமாக வுடைய 62சுலோகங்களால், ஐந்து, அல்லது, ஒன்பது, அல்லது, பதினொரு காண்ட ரூபமாகச் செய்யப்பட்டிருக்கின்றது. வேதத்தில் உள்ள, உதாத்த அநுதாத்த ஸ்வரித ஹ்ரஸ்வ தீர்க்க புலுத ஆதி விசிஷ்டம் ஆகிய உயிர் மெய் வடிவ வர்ண உச்சாரண ஸ்தாந விசேஷங்களைத் தெரிந்து கொள்ளுதல் பலன் ஆம். அஃதின்றேல், மந்திரங்கட்கு அநர்த்தகத் தன்மை உண்மையின், "ஸ்வரத்தாலும், வர்ணத்தாலும் ஹீநம் ஆன மந்திரம் ஆனது, மித்யா ப்ரயுக்தமாய், அவ்வர்த்தத்தினைக் கூறுவதில்லை. அவ் வாக்கு ஆன, வஜ்ஜரம் ஆனது, யஜமானனைக் கொல்லுகின்றது, ஸ்வரத்தினது அபராதத்தால், "இந்த்ர சத்ரு" என்று, சிக்ஷை 52-வது சுலோகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. சிக்ஷை எல்லா வேதத்திற்கும் உரியது ஆம். ஒவ்வொரு வேத சாகைகள்

தோறும் பின்ன ரூபங்களாய், பிரதிசாக்யம் எனப் பெயரிய வைகள், ஏனைய முநிகளால் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அவை சிக்ஷைக் குட்பட்டன.

2. வியாகரணம் என்பது, பாணிநி முநிவரால், பரமேச்வரன் கொடுத்த 14 சூத்திரங்களை ஆதர வாகக் கொண்டு, "விருத்தி ராதைச்" என்பதனை ஆதி யாக, 'அ அ இதி" என்பதை அந்த மாக உடைய, 8 அத்தியாய, மாய், அத்தியாயங்கள் தோறும் நான்கு பாதங்கள் உடை யது ஆய், 3983 சூத்திரங்களில் செய்யப்பட்டிருக்கின்றது. வேதத்தில் உள்ள பத சாதுத்வ ஞாநமும், ஊகாதிகளும், பிரகிருதி பிரத்யய லிங்க சமாசங்களை போதித்தலும், பலன் ஆம். காத்தியாயந முநிவரால் இதற்கு, "வார்த்திக" ரூப வியாக்யாநம் செய்யப்பட்டிருக்கின்றது. சூத்திரம் வார்த் திகம் என்னும், இரண்டின் பேரிலும், பதஞ்சலி முநிவரால், மஹா பாஷ்யம் என்னும் வியாக்யாநம் செய்யப்பட்டிருக் கின்றது. பாணிநி சூத்திரத்திற்கு, "காசிகா விருத்தி" என்று ஒரு வியாக்யாநம் பண்டிதவர ஜயாதித்யரால் செய்யப்பட்டிருக்கின்றது.

இந்திரன், அமர சிம்ஹன், கௌமாரர் என்பவர்கள், வேறு வியாகரணம் செய்திருக்கின்றனர். அவை, வேத சப்த விஷயம் இன்மையின், லௌகிகப் பிரயோக பத ஞாநத்தின் பொருட் டாம். இதனால், இவை, வேதாங் கங்கள் அன்று.

3. நிருக்த்தம் என்பது, யாஸ்க முநிவரால், "சமாம் நாய; சமாம்நாத: (அது வியாக்யாநம் செய்யத்தக்கது)" என்பதை ஆதி யாக வுடையதும், "வியாக்யாதம் அக்நீ;" என்பதை அந்த மாக உடையதும், 450 சூத்திரங்களால். பதி னன்கு அத்தியாய மாகச் செய்யப்பட்டிருக்கின்றது, வேத மந்திர பதங்களின் அர்த்த ஞாநத்தினை உண்டாக்குதல் பலன் ஆம். வேத மந்திரங்களில், பிரசித்தம் இல்லாத பதங் களின் அர்த்தங்களை அறிவிக்கும் பொருட்டுப் பெயர்கள்

நிருபிக்கப்பட்டிருக்கின்றன. வர்ணுகமம், வர்ண விபர்யயம், வர்ண விகாரம், வர்ண நாசம், தாதுக்கட்கு அதிசய அர்த்தத்தோடு சம்பந்தம், ஐந்தும் நிருபிக்கப்படும். நாமம், ஆக்யாதம், நிபாதம், உபசர்க்கம் என்னும் நான்கு வித பத சமுதாயத்தினை நிருபித்து, வைதிக மந்திரங்களினுடைய பதங்களின் அருத்தம் அறிவிக்கப்பட்டிருக்கின்றது மந்திரங்கட்கு அநுஷ்டேய அர்த்தப் பிரகாச வாயிலாகக் கரணத் தன்மை உண்மையின், வாக்கியார்த்த ஞானத்திற்குப் பதார்த்த ஞாந அதீநத் தன்மை உண்மையானும் மந்திரத்தில் உள்ள பதார்த்த ஞானத்தின் பொருட்டு, நிருக்தம் அபேக்ஷிக்கப்பட்டது. இஃதின்றேல், அநுஷ்டாந சம்பவம் இன்மையின். "ஸ்ருண்யேவ ஜர்ப்பரீ துர்ப்பரி தூந" என்பதாதி, அதி துக்கத்தாலும் ஊகிக்கத் தகாதன வானவற்றிற்குப் பிரகாராந்தரத்தால் அர்த்த ஞானத்தினது சம்பவம் இன்மையின், வைதிக திரவிய தேவதை ரூப பதார்த்த பரியாய சப்த ரூபம் ஆன நிகண்டு முதலியன நிருக்கத்தின்கண் அடங்குகின்றன. யாஸ்க முநிவரால், ஐந்து அத்தியாய ரூப நிகண்டு என்னும் நூல் செய்யப்பட்டிருக்கின்றது. அமர சிம்ஹன், ஹேமச் சந்திரன் முதலியவர் இயற்றிய வேறு எல்லாக் கோசங்களும் நிகண்டு ரூபத் தன்மையால், நிருக்தத்தில் அடங்கும்.

4 **சந்தஸ்** என்பது, பிங்கல நாக முநிவரால், "தீச் ரீஸ் த்ரீம்" என்பதனை ஆதியாகவும், "பரே பூர்ணம் பரே பூர்ணம்" என்பதை அந்தமாகவும், உடைய எட்டு அத்தியாயம் செய்யப்பட்டிருக்கின்றது. அவற்றுள், "அத லௌகிகம்" என்பதை அந்தம் ஆக உடைய மூன்று அத்தியாயத்தால், காயத்ரீ, உஷ்ணிக், அநுஷ்டுப், பருஹதி பக்ந்தி, த்ரிஷ்டுப், ஜகதீ என ஏழு உட் பிரிவுகளோடு கூடிய சர்வ சந்தங்களும் பிரசங்கத்தால் நிருபிக்கப்பட்டன. "அத லௌகிகம்" என ஆரம்பித்து, ஐந்து அத்தியாயங்களால், புராண இதிகாசாதிகளில் பயன்படும் லௌகிக சந்தங்கள் பிரசங்

2

கத்தால், வியாகரணத்தில், லௌகிக பத நிருபணம் போல, நிருபிக்கப்பட்டன. வேதத்தில் உள்ள ரிக் மத்திரங்கட்குப் பாத பத்த சந்த விசேஷ விசிஷ்டத் தன்மை யிருத்தலின், அதனை அறியாவிடின் நிந்தை கேட்கப்படலாலும், சந்த விசேஷ நிமித்த, அநுஷ்டாந விசேஷத்தாலும், சந்த ஞாநம் விரும்பப்படுகிறது. சந்த சாதுத் தன்மை விஷயமும், அநேக சந்தத்தின் ஞாநமும், அநேக சந்தம் செய்தலும், பலன் ஆம். வேதத்திற் கூறிய காயத்ரி முதலிய சந்தசுக்களின் ஞாநம் உண்டாகின்றது. மகண ஆதி கணம், மாத்திரை முதலிய பேதத்தினுல் இரு வகைச் சந்தம் ஆம். சந்தத்தின் ஜாதி அநந்தமும், அபரிமிதமும், ஆம். சேஷ முநிவரும் சந்தஸ் கிரந்தம் செய்திருக்கின்றுர்.

5 சோதிஷம் என்பது, லகதா என்பவர் செய்தது, "பஞ்ச சம்வத்ஸர மயம்" என்பது ஆதி. "பஞ்ச சம்வத்சர மயம் பிரபத்யேதே" என்பது. அந்த மாக உடையது, ஆதித்யர், கர்க்கர் முதலியோரால். அநேக பிரகார மாகச் செய்யப்பட்டிருக்கின்றது அதில், வேதத்திற் கூறிய கர்மாநுஷ்டாந ஏது, சுப அசுப கால நிருபணம், இச் சந்மத்தில் உண்டாம் பிராரப்த கர்மத்தின் பல சுக துக்க ஆயுள் நியமங்களை, பிரஹஸ்பதி முதலிய கிரகங்களின் சுப அசுப ஸ்தாந வாயிலாய், நிருபணம் செய்யப்பட்டிருக்கின்றது. இது, வைதிக கர்மாங்க மாய தர்சாதி கால ஞாநத்தின் பொருட்டு வேதத்தில் விரும்பப்படுகிறது. இனி உண்டாம் சுக துக்கங்களின் ஞாநம் இதன் பலன் ஆம்.

6 கல்பம் என்பது, 1 காத்தியாயநர், 2 ஆச்வலாயநர், 3. ஜைமிநி, 4. ஆபஸ்தம்பர், 5. பௌதாயநர், 6. வைகாசநர், என்னும் அறுவரால் செய்யப்பட்டிருக்கின்றது. அதில், கர்மங்களை அநுஷ்டிக்கும் முறையும், யக்ஞம் செய்விக்கும் பிராமணன் ரித்விக் ஆதலும், ரித்விக்கினது வேறு வேருகச் செய்ய யோக்கிய கர்மங்களை அறிவிப்பனவு மாம் வைசுவாநராதி 14 உபாசனை அநுஷ்

டாநப் பிரகாரமும் கூறப்படும். சித்த ஏகாக்கிரத்தை உண்டாக்குதல் வாயிலாக வேதார்த்த உபயோக மாம். சாகாந்தரீய குணோபசம்ஹாரத்தினுல், வைதிக அநுஷ்டாநக் கிரம விசேஷ ஞாநத்தின் பொருட்டுக் கல்ப சூத்திரங்கள் விரும்பப்படுவன, அவையும், பிரயோக பேதத்தால், மூவிதம் ஆம். அவற்றுள், ஹௌத்ரப் பிரயோகப் பிரதிபாதகங்கள், ஆச்வலாயந சாங்க்யாயந ஆதிகளால் செய்யப்பட்டன. ஆத்வர்யவப் பிரயோகப் பிரதிபாதகங்கள், பௌத்தாயந, ஆபஸ்தம்ப, காத்யாயந ஆதிகளால் செய்யப்பட்டன. ஔத்காரப் பிரயோகப் பிரதிபாதகங்கள், லாட்யாயந, திராஹ்ய்வாயண ஆதிகளால் செய்யப்பட்டன. ஆச்வலாயநர், சிரௌத சூத்ரம், பூர்வ ஷட்கம், ஆறத்தியாயம் 96 சூத்ரம் என்பதும், உத்தர ஷட்கம், ஆறத்தியாயம் 70 சூத்ரம் என்பதும், கிருஹ்ய சூத்ரம் 4 அத்தியாயம் 55 சூத்ரம் என்பதும் (ஆக 225) செய்திருக்கின்றுர்.

3 நியாயம்.

நியாயம்:— பிராசீநம், நவீநம் என்னும் பேதத்தினுல், இரு வகைத் தாம். பிராசீநம், நியாய சாஸ்திரம் எனப்படும். கௌதம முநிவரால், "பிரமாண பிரமேய சம்சய பிரயோஜந திருஷ்டாந்த சித்தாந்த அவயவ தர்க்க நிர்ணய வாத ஜல்ப விதண்டா ஹேத்வாபாச சல ஜாதி நிக்ரஹஸ்தாநாநாம் தத்வஞாநாத் நிஸ்சிரேயசாதிகம:" என்பதை ஆதியாக, "ஹேத்வாபாசாச்ச யதோக்தா:" என்பதை, அந்தமாக வுடைய 530 சூத்திரங்கள் உள்ள, ஐந்து அத்தியாய வடிவமாய், அத்தியாயந் தோறும் இரண்டு இரண்டு ஆஹ்நிகம் உள்ள, நியாய சாதிஸ்ரம் செய்யப்பட்டிருக்கின்றது.

இதன், முதலாவது அத்தியாயம் 1-வது ஆஹ்நிகத்தில், பிரமாண முதலிய ஒன்பது பதார்த்தங்களின் லக்ஷணமும், 2-வது ஆஹ்நிகத்தில், வாதம் முதலிய ஏழு பதார்த்தங்களின் லக்ஷணங்களும், 2-வது அத்தியாயம் 1-வது ஆஹ்நிகத்தில், சம்சய விசாரமும், பிரமாண சதுஷ்டயங்கட்கு அப்பிரமாண்ய சங்கா நிவிர்த்தியும், 2-வது ஆஹ்நிகத்தில்,

அர்த்தாபத்தி முதலியன, அநுமாந முதலியவற்றில், அந்தர் கத விசாரமும், 3—வது அத்தியாயம் 1—வது ஆஹ்நிகத்தில், ஆத்மா சரீரம் இந்திரியம் அர்த்தம் என்பவற்றின் நிருபண மும், 2-வது ஆஹநிகத்தில், புத்தி மந நிருபணமும் 4-வது அத்தியாயம் 1—வது ஆஹ்நிகத்தில், பிரவிர்த்தி, தோஷம், சாக்காடு. பலம், துக்கம், மோக்ஷம், என்பவற்றின் நிருபண மும், 2—வது ஆஹ்நிகத்தில், தோஷ நிவிர்த்தி, அவயவி ஆதி நிருபணமும், 5—வது அத்தியாயம் 1—வது ஆஹ்நிகத்தில், ஜாதி பேத நிருபணமும், 2—வது ஆஹ்நிகத்தில், நிக்கிரஹ ஸ்தாந பேத நிருபணமும் செய்யப்பட்டிருக்கின்றது. இதில், ஆத்ம ஞாநத்தின் பொருட்டு, ஐந்து அவயவங்களை யுடைய யுக்தி வாக்கியங்களினுல், உத்தேசம், லக்ஷணம், பரீக்ஷையின் வாயி லாய், பிரமாணம் முதலிய பதி னுறு பதார்த்தங்கள் விசாரிக்கப்பட்டிருக்கின்றது இதில், யுக்தி பிரதாந மாக எழுதப்பட்டிருக்கின்றது யுக்தியின் சிந்தநத் தால், தீவிர புத்தி யுண்டாகிறவன், மநநம் செய்வதில் சமர்த் தன் ஆகின்ருன். இச் சூத்திரங்களின் மீது, வாத்ஸ்யாயந முநிவர் பாஷ்யமும், விச்வ நாதர் விருத்தி ரூப வியாக்கியாந மும், செய்திருக்கின்றனர்.

நவீநம்:- வைசேஷிக சாஸ்திரம் எனப்படும். ‡கணுத முநிவரால், 'அதாதோ தர்மம் வ்யாக்யாஸ்யாம:' என்பதை

---

‡இவருக்கு கபோதி (புரு) என்னும் பக்ஷியின் தன்மையினை அநுஷ்டித்துக் கொண்டு, வழியில் கிடக்கின்ற தண்டுல கணங் களை கொண்டு வந்து, ஒவ் வொரு திநமும் புசித்தலின், 'கணுதர்' என்றும், 'கண பக்ஷர்' என்றும், உலூக ரிஷியின் புதல்வ ராக லின், ஔலூக்யர் என்றும், இவர் கஸ்யப கோத்திரத்தில் பிறந் தவர் என்றும், தபஸ் செய்யும் கணுத முநியின் பொருட்டு ஈசுவரன் தா மாகவே உலூக (ஆந்தை) ரூபம் தரித்துப் பிரத்தி யக்ஷ மாய், "ஆறு பதார்த்தங்களை உபதேசஞ் செய்" என்று கூறினுர் என்று ஐதிய மாகவும், கேட்கப்படுகின்றது. இதனுல், ஔலூக்யர் என்றும், இந்தத் தரிசநம் ஔலூக்ய தரிசநம் என் றும், கௌதமர் கூறிய பிரமாணுதி பதி னுறு பதார்த்தங்கள்—

ஆதி யாக, "தத் வசநாத் ஆம்நாயஸ்ய பிராமாண்யம் இதி" என்பதை, அந்த மாக வுடைய, 370 சூத்திரங்கள் உள்ள, பத் தத்தி யாய வடிவ மாய், அத்தியாயந் தோறும் இரண்டு இரண்டு ஆஹ்நிகம் உள்ள, வைசேஷிக சாஸ்திரம் செய்யப் பட்டிருக்கின்றது. இதன், 1-வது அத்தியாயம், 1-வது ஆஹ்நிகத்தில், ஜாதி விசிஷ்ட வியக்தி நிருபணமும், 2-வது ஆஹ்நிகத்தில், ஜாதி விசேஷம் என்பவற்றின் நிருபணமும், 2-வது அத்தியாயம், 1-வது ஆஹ்நிகத்தில், பூத விசேஷ லக்ஷணமும், 2-வது ஆஹ்நிகத்தில், திக்குக் காலங்களின் நிருபணமும். 3-வது அத்தியாயம், 1-வது ஆஹ்நிகத்தில், ஆத்மாவின் லக்ஷணமும், 2-வது ஆஹ்நிகத்தில், அந்தக் கரணத்தின் லக்ஷணமும், 4-வது அத்தியாயம், 1-வது ஆஹ்நிகத்தில், சரீரத்தின் உபயோகிகளின் விசாரமும், 2-வது ஆஹ்நிகத்தில், சரீர விசாரமும், 5-வது அத்தியாயம், 1-வது

கணுதருக்கும் அங்கிகார மாயினும், இச் சகத்தில் உள்ள பதார்த்தங்களில், தர்மிகள் எவை, தர்மங்கள் எவை. அவை, எத்தனை? எனப் பரஸ்பரம் சம்பந்தம் இன்றிய ரூபத்தினுல் பதார்த்த ஞாநம் உண்டாகாதவரை சாதர்மிய வைதர்மிய ஞாநம் இன்மையின், சஹசார நியம ரூப வியாப்தி ஞாநம் உண்டாவது சுலபம் அன்று என உணர்ந்து, திரவிய குண முதவிய பேதத்தினுல், ஏழே பதார்த்தம் என நிச்சயித்து, இந்த திரவியத்திற்கு, இது ஸ்வரூபம், இவையே, அதன் குணங்கள் என, யாவும் நல் வியவஸ்தை யாகக் கணுதர் கூறியிருக்கின்ருர். இதனுல், இவ் வாருய விசேஷத்தினை உத்தேசித்து பிரவிருத்தித் திருத்தலின், இது வைசேஷிக சாஸ்திரம் என்றும் சொல்லுகின்றனர்.

இவ் வாறு, சர்வ தரிசந சங்கிரகத்தின் தரிசந அங்குரம் என்னும் வியாக்யாநத்தில், வாசுதேவ சாஸ்திரியால் எழுதப்பட்டிருக்கின்றது.

ஆஹ்நிகத்தில், சாரீர கர்ம விசாரமும், 2-வது ஆஹ்நிகத்தில், மாநசிக கர்ம விசாரமும், 6-வது அத்தியாயம், 1-வது ஆஹ்நிகத்தில், தாந பிரதிக்கிரக தர்ம பேதங்களின் நிருபணமும், 2-வது ஆஹ்நிகத்தில், நான்கு ஆச்சிரமத்திற்கும் உரிய தர்மங்களின் நிருபணமும். 7-வது அத்தியாயம், 1-வது ஆஹ்நிகத்தில் புத்தியை அபேக்ஷிக்காத குண நிருபணமும், 2-வது ஆஹ்நிகத்தில், புத்தியை அபேக்ஷித்த குண நிருபணமும் சமவாய நிருபணமும். 8-வது அத்தியாயம், 1-வது ஆஹ்நிகத்தில், நிர்விகல்ப பிரத்தியக்ஷ விசாரமும், 2-வது ஆஹ்நிகத்தில், பிரமாண விசாரமும், 9-வது அத்தியாயம், 1-வது ஆஹ்நிகத்தில், அபாவ நிருபணமும், 2-வது ஆஹ்நிகத்தில், சப்த, உபமிதிகள், அநுமிதியில் அந்தர்பாவமும், ஸ்மிருதி, அவித்தை, வித்தை, என்பவற்றின் லக்ஷணம் நிருபணமும், 10-வது அத்தியாயம், 1-வது ஆஹ்நிகத்தில், சுக துக்கங்களின் பேதம், சரீர அவயவங்களின் பரஸ்பர பேதம், என்பனவற்றின் நிருபணமும், 2-வது ஆஹ்நிகத்தில், மூன்று காரணங்களின் விசேஷ விசாரமும், செய்யப்பட்டிருக்கின்றது. இதில், ஆத்ம ஞாநத்தின் பொருட்டு, திரவியம் குணம் கர்மம் சாமாந்யம் விசேஷம் சமவாயம் அபாவம் ஆகிய ஏழு பதார்த்தங்கள் விசாரிக்கப்பட்டிருக்கின்றது. இருபத்தொரு துக்க நிவிர்த்தியே, இதில், மோக்ஷமாம்.

இச் சூத்திரங்களின் மீது, அநந்த தேவர் பாஷ்யமும், சந்திர காந்த பட்டாசாரியர் பாஷ்யமும், பிரசஸ்த ஆசாரியர் பாஷ்யமும், சங்கர மிசிரர் சூத்திர உபஸ்காரம் என்னும் வியாக்யாநமும், செய நாராயண பட்டாசாரியர், கணாத சூத்தர விவிருதி என்னும் வியாக்யாநமும், செய்திருக்கின்றனர். இவற்றினை, ஆதார மாகக் கொண்டு, கெங்கேச

உபாத்யாயர், தத்வ சிந்தா மணி என ஒரு நூலும், இதன் மீது, சிரோமணி பட்டாசாரியர், தீதிதி என்னும் வியாக்யாநமும், இதன் மீது, கதாதர பட்டாசாரியார், காதாதரி என்னும் வியாக்யாநமும், மதுராநாத பட்டாசாரியர், மாதுரி என்னும் வியாக்யாநமும், ஜகதீஸ பட்டாசாரியர், ஜாகதீசி என்னும் வியாக்யாநமும், செய்திருக்கின்றனர்.

4. மீமாம்ஸை.

மீமாம்ஸை:- பூர்வ மீமாம்ஸை, உத்தர மீமாம்ஸை என இரு வகையாம். அவற்றுள், பூர்வ மீமாம்ஸை ஜைமிநி முநிவரால், "அதாதோ தர்ம ஜிக்ஞாசா" என்பதை ஆதியாக, "அந்வாஹார்யே ச தர்சநாத்" என்பதை அந்தமாக உடைய, 2745 சூத்ரம், 907 அதிகரணம், 60 பாதம் உள்ள, 12 அத்தியாய வடிவ, பூர்வ மீமாம்சா சாஸ்திரம் செய்யப்பட்டிருக்கின்றது.

இதன்கண், முதலாவது அத்தியாயம் நாலு பாதத்திலும் உள்ள, 42 அதிகரணத்திலும், தர்மப் பிரமாணமும், 2-வது அத்தியாயம் நாலு பாதத்திலும் உள்ள, 47 அதிகரணத்திலும், தர்ம பேத அபேதங்களும், 3-வது அத்தியாயம் எட்டுப் பாதத்திலும் உள்ள, 157 அதிகரணத்திலும், அங்க அங்கி பாவமும், 4-வது அத்தியாயம் நாலு பாதத்திலும் உள்ள, 62 அதிகரணத்திலும், கிருத்வர்த்த-புருஷார்த்த-பேதத்தால், பிரயுக்தி விசேஷமும், 5-வது அத்தியாயம் நாலு பாதத்திலும் உள்ள, 54 அதிகரணத்திலும், சுருத்யர்த்த- பாடநாதிக் கிரம-பேதமும், 6-வது அத்தியாயம் எட்டுப் பாதத்திலும் உள்ள 107 அதிகரணத்திலும்,

அதிகார விசேஷமும், 7-வது அத்தியாயம் நாலு பாதத்திலும் உள்ள, 23 அதிகரணத்திலும், சாமாங்ய அதிதேசமும், 8-வது அத்தியாயம் நாலு பாதத்திலும் உள்ள, 35 அதிகரணத்திலும், விசேஷ அதிதேசமும், 9-வது அத்தியாயம் நாலு பாதத்திலும் உள்ள, 67 அதிகரணத்திலும், ஊகமும், 10-வது அத்தியாயம் எட்டுப் பாத்திலும் உள்ள, 179 அதிகரணத்திலும், பாதமும், 11-வது அத்தியாயம் நாலு பாதத்திலும் உள்ள, 64 அதிகரகணத்திலும், தந்திரமும், 12-வது அத்தியாயம் நாலு பாதத்திலும் உள்ள, 68 அதிகரணத்திலும், பிரசங்கமும், நிருபிக்கப்பட்டிருக்கின்றது. இதனது, 1-வது அத்தியாயம் நாலு பாதத்திலும் உள்ள, 42 அதிகரணத்திலும், விதி அர்த்த வாதம் மந்திரம் ஸ்மிருதி நாமதேயம் என்பவற்றின் பிராமாண்ய விசாரமும், 2-வது அத்தியாயம் நாலு பாதத்திலும் உள்ள, 47 அதிகரணத்திலும், கர்ம பேதத்திற்கு உபோத்காதம், பிரமாண அபவாதம், பிரயோக பேதம் என்பவற்றின் விசாரமும், 3-வது அத்தியாயம் எட்டுப் பாதத்திலும் உள்ள, 157 அதிகரணத்திலும், சுருதி லிங்கம் வாக்யம் பிரகரணம் ஸ்தாநம் சாமக்கிரியை என்பவற்றிற்கு விரோதங்களும், பிரதிபத்தி கர்மம். அநாரப்பியாதீதம், அநேக பிரதாநத்திற் குபகாரக மான பிரயாஜ முதலிய கர்மங்களின் விசாரம், யஜமாநன் செய்யும் கர்ம விசாரமும், 4-வது அத்தியாயம் நாலு பாதத்திலும் உள்ள, 62 அதிகரணத்திலும், ராஜசூய யாகத்திற்கு அங்கமான பிரதாந பிரயோஜகத்வம்-அப்பிரதாந பிரயோஜகத்வம்-பர்ணமயம் ஆன ஜுஹுவின் பலம்-சொற் கேட்டான் ஆடல்-என்பன வாதி

விசாரமும், 5-வது அத்தியாயம் நாலு பாதத்திலும் உள்ள, 54 அதிகரணத்திலும், சுருதி முதலிய கிரமங்கள்—அவற்றின் விசேஷங்கள்—பிராபல்ய தௌர்ப்பல்யங்கள் என்பவற்றின் விசாரமும். 6—வது அத்தியாயம் எட்டுப் பாதத்திலும் உள்ள, 109 அதிகரணத்திலும், அதிகாரி—அவன் தர்மம்—திரவியப் பிரதிநிதி-அர்த்த லோபப் பிராயச்சித்தம்-சத்திரம்-தேசம்—அக்நி—என்பவற்றின் விசாரமும், 7—வது அத்தியாயம் நாலு பாதத்திலும் உள்ள, 23 அதிகரணத்திலும், பிரத்யக்ஷ வசந அதிதேசங்களின், நாம-லிங்க-அதிதேச விசாரமும், 8—வது அத்தியாயம் நாலு பாதத்திலும் உள்ள, 35 அதிகரணத்திலும், ஸ்பஷ்ட—அஸ்பஷ்ட – பிரபல—லிங்க—அதிதேசத்தின் அதிதேச விசாரமும், 9—வது அத்தியாயம் நாலு பாதத்திலும் உள்ள, 67 அதிகரணத்திலும் ஊக விசாரத்திற்குபயோக மான சாமாவின் ஊகம்—மந்திர ஊகம்—பிரசங்கத்தாற் பெறப்பட்ட விஷய விசாரமும், 10—வது அத்தியாயம் எட்டுப் பாதத்திலும் உள்ள, 179 அதிகரணத்திலும், பாதத்திற்குக் காரண மான துவார லோபம்-விஸ்தார மான பாத காரணம்—நஞ் அர்த்தம்—என்பவற்றின் விசாரமும், 11—வது அத்தியாயம் நாலு பாதத்திலும் உள்ள, 64 அதிகரணத்திலும் தந்த்ர—உபோத்காதம்—தந்த்ர—அபாவம்—தந்த்ரப் பிரபஞ்சகம் முதலிய விசாரமும், 12—வது அத்தியாயம் நாலு பாதத்திலும் உள்ள, 68 அதிகரணத்திலும், பிரசங்கம்-தந்த்ர நிர்ணயம்—சமுச்சயம்—விகற்பம் என்பவற்றின் விசாரமும் செய்யப்பட்டிருக்கின்றது.

இந்தச் சூத்திரங்களின் மீது, குமாரில பட்டாசாரியரால் சுலோக வார்த்திக ரூப வியாக்யாநமும், சபர சுவாமியினுல். பாஷ்யமும், செய்யப்பட்டிருக்கின்றது. பாஷ்யத்தின் மீது, பிரபாகர பட்டாசாரியாரால், ஒரு வியாக்யாநம் செய்யப்பட்டிருக்கின்றது. பார்த்த சாரதி மிசிரர். சாஸ்திர தீபிகை என்று ஒரு வியாக்யாநமும் செய்திருக்கின்றனர்.

மாதவாசாரியர், ஜைமநீய நியாய மாலே என்று, இதனே அநுசரித்து ஒரு வியாக்யாநம் செய்திருக்கின்றனர்.

இதன்கண், நித்திய நைமித்திய காமிய பிராயச்சித்த நிஷித்தம் என்னும் ஐ வகைக் கர்மங்களின் அதிகாரிகள், ஹாந உபாதாநத்தின் பொருட்டுச் சுருதி தம தர்த்தத்தில், தாத்பரிய நிவாரணத்தின் பொருட்டு, அங்க அங்கி விசார மும், செய்யப்படுகிறது. வர்ணுக்சிரம அபிமாநி அதிகாரி ஆசாவா ுய புருஷனுக்கு. சகாம கர்மப் பிரவிர்த்தி வாயி லாய்ச் சுவர்க்காதி பலத்தைப் போதிப்பது ஆகும்.

4. (1) தீயேய விசார மீமாம்ஸை.

ஜைமிநிமுநிவரால், "அநுயஜதீதி" என்பதை ஆதி யாக, "வித்யதேவா அங்ய காலத்வாத் யதா யாஜ்யா ஸம்ப் ரைஷோ யதாயாஜ்யா ஸம்ப்ரைஷ:" என்பதை அந்த மாக உடைய, 347 சூத்திரம், பதி ுறு பாதம், நான்கு அத்தியா யம் உள்ள, சங்கர்ஷண காண்டம் செய்யப்பட்டிருக் கின்றது. இதற்கு, உபவர்ஷ மஹரிஷி, 'விருத்தி' என்னும் வியாக்யாநமும், பாஸ்கர பட்டாசாரியர், "பாட்ட சந்தி ரிகை" என்னும். வியாக்யாநமும், செய்திருக்கின்றனர். சபர சுவாமி, "பாஷ்யம்" என்னும் வியாக்யாநமும் செய் திருக்கின்றனர். இதன்கண், கர்மமும், உபாசனேயும், பிரதி பாதிக்கப்பட்டிருக்கின்றது. இந்த சங்கர்ஷண காண்டத் தினே, விசார சாகர கிரந்த கர்த்தா நிச்சல தாஸர் ஐந்து அத் தியாயம் என்கின்ருர்.

4 (2) உத்தர மீமாம்ஸை.

உத்தர மீமாம்ஸை;– வியாச முநிவரால், சீதா உபநிஷத் தில், இரண்டாவது மந்திர மாகிய, "அதாதோ பிரஹ்ம ஜிஞ்ஞாஸா" என்பதை ஆதியாக, "அநா வ்ருத்தி: சப்தாத்" என்பதை அந்த மாக உடைய, 555 சூத்ரம், 192 அதிகர ணம், 16 பாதம் உள்ள, நான்கு அத்தியாய ரூப, உத்தர

மீமாம்சா சாஸ்திரம் செய்யப்பட்டிருக்கின்றது. இதில், அத்தியாயம் நான்குக்கும் அதிகரண பிரதாந சூத்ரம் 192, கௌண சூத்ரம் 363 ஆக இருக்கின்றது. இதனது 134 சூத்ரம். 40 அதிகரணம் உள்ள, முதலாவது அத்தியாயத்திற்குச் சமந்வய அத்தியாயம் என்று பெயர். அதில், எல்லா உபநிஷத் வாக்கியங்களும், நேராகவேனும், பரம்பரையாகவேனும். பிரத்தியக் அபிந்ந அத்விதீயப் பிரஹ்மத்தினைப் பிரதிபாதநஞ் செய்கின்றன, அந்யவற்றை அல்ல எனக் கூறப்பட்டிருக்கிறது அதில், முதலாவது பாதம் 11 அதிகரணத்திலும், ஸ்பஷ்ட பிரஹ்ம லிங்கத்தோடு கூடிய வாக்கியங்களின் விசாரமும் 2–வது பாதம் 7 அதிகரணத்திலும், உபாஸ்யப் பிரஹ்மத்தினைக் கூறும் அஸ்பஷ்ட பிரஹ்ம லிங்கத்தோடு கூடிய வாக்கியங்களின் விசாரமும், 3–வது பாதம் 14 அதிகரணத்திலும். பெரும்பான்மையும் ஞேயப் பிரஹ்மத்தினைக் கூறும் அஸ்பஷ்ட பிரஹ்ம லிங்கத்தோடு கூடிய வாக்கியங்களின் விசாரமும், இவ் வாறு, மூன்று, பாதங்களால், வாக்கிய விசார சமாப்தியும், 4–வது பாதம் 8 அதிகரணத்திலும், பிரதாந விஷய மாகச் சந்தேகிக்கப் பட்ட அவ்யக்த–அஜா-முதலிய பதங்களின் விசாரமும், செய்யப்பட்டிருக்கின்றது 157 சூத்ரம், 47 அதிகரணம் உள்ள, இரண்டாவது அத்தியாயத்திற்குச் சமந்வய அத்தியாயம் என்று பெயர் அதில், முதலாவது அத்தியாயத்தால், வேதாந்தங்கட்கு அத்வயப் பிரஹ்மத்தில் சமந்வயம் சித்திக்கில், அதன்கண் சம்பாவிக்கப்பட்ட ஸ்மிருதி தர்க்கம் முதலியவற்றின் விரோதத்தினைச் சங்கித்து, அதன் பரிகார பூர்வம் அவிரோதம் காட்டப்பட்டிருக்கின்றது அதில், 1–வது பாதம், 13 அதிகரணத்திலும், வேதாந்த சமந்வயத்திற்குச் சாங்கியர்-யோகர்-கணாதர்-முதலியோரது ஸ்மிருதிகளாலும், சாங்கியர் முதலியோரால் கூறப்பட்ட தர்க்கங்களாலும், உண்டான விரோத பரிகாரமும், 2-வது பாதம், 8 அதிகரணத்திலும், விசாரத்திற்குத் தன் பக்ஷத்தினை ஸ்தாபித்தல், அந்ய பக்ஷத்தினை நிராகரித்தல் ரூப இரு வடிவம்

உள வாகலின், சாங்கியர் முதலியோர் மதங்கட்குத் துஷ்டத் தன்மையினைப் பிரதிபாதித்தலும், 3-வது பாதம், 17 அதிகரணத்திலும், பூர்வ பாகத்தால், மஹா பூத சிருஷ்டி முதலிய சுருதிகட்குப் பரஸ்பர விரோத பரிகாரமும், உத்தர பாகத்தால், ஜீவ விஷய சுருதிகளின் பரஸ்பர விரோத பரிகாரமும், 4-வது பாதம், 9 அதிகரணத்திலும், இந்திரியாதி விஷய சுருதிகளின் விரோத பரிகாரமும், செய்யப்பட்டிருக்கின்றது. 186 சூத்திரம் 67 அதிகரணம் உள்ள. 3-வது அத்தியாயத்திற்கு, சாதந அத்தியாயம் என்று பெயர். அதில், எல்லாச் சாதநங்களின் நிருபணமுஞ் செய்யப்பட்டிருக்கின்றது. அதன்கண், 1-வது பாதம். 6 அதிகரணத்திலும் ஜீவனுக்குப் பரலோக கமந நிருபணத்தால் வைராக்கியப் பிரதிபாதநமும். 2-வது பாதம், 8 அதிகரணத்திலும். பூர்வ பாகத்தால், த்வம் பதார்த்த சோதனையும் உத்தர பாகத்தால், தத் பதார்த்த சோதநமும், 3-வது பாதம், 36 அதிகரணத்திலும், நிர்க்குணப் பிரஹ்மத்தில் நாநா சாகைகளில் படிக்கப்பட்ட புநர் உக்த (மீண்டும் கூறிய) பத உப சம்ஹார நிருபணமும், பிரசங்கத்தானும், சகுண வித்தையில் சாகாந்தரீய குண உப சம்ஹார அநுப சம்ஹாரங்களின் நிருபணமும், 4-வது பாதம். 17 அதிகரணத்திலும், நிர்க்குணப் பிரஹ்ம வித்தைக்குப் பகி ரங்க சாதநங்களான—ஆசிரம தர்ம – யக்ஞ – தாநாதிகளும், அந்த ரங்க சாதநங்களான சம-தம-திதித்தியாசநாதிகளும், நிருபணம் செய்யப்பட்டிருக்கின்றது. 78 சூத்திரம், 38 அதிகரணம் உள்ள, 4-வது அத்தியாத்திற்கு, பல அத்தியாயம் என்று பெயர். அதில், சகுண நிர்குண வித்தைகளின் பல விசேஷ நிர்ணயம் பரிகாரத்தோடு செய்யப்பட்டிருக்கின்றது. அதில், 1-வது பாதம், 14 அதிகரணத்திலும், சிரவணுதி ஆவிருத்தியால், நிர்க்குணப் பிரஹ்மத்தினை, அல்லது, உபாசனையின் ஆவிருத்தியால், சகுணப் பிரஹ்மத்தினை, சாக்ஷாத்காரம் செய்து, ஜீவிக்கும் போதே, பாப புண்ணிய லேபநம் இன்றிய ஜீவந் முக்தியும், 2-வது பாதம், 11 அதிகரணத்திலும், மரணம்

அடைகின்றவனுக்கு, உத் கிராந்திப் பிரகார சிந்தனையும், 3—வது பாதம், 6 அதிகரணத்திலும், ச கு ண ப் பிரஹ்மத்தினை, உணர்ந்து மரித்தோனுக்கு, உத்தர மார்க்க நிருபணமும். 4—வது பாதம், 7 அதிகரணத்திலும், பூர்வ பாகத்தால் நிர்க்குண பிரஹ்ம வித்திற்கு, விதேக கைவல்ய பிராப்தியும், உத்தர பாகத்தால், சகுண பிரஹ்ம வித்திற்கு, பிரஹ்ம லோகத்தில் இருத்தலும், சொல்லப்பட்டிருக்கின்றது.

இந்தச் சூத்ரங்கட்கு கலி 3889—க்குச் சரியான, விக்கிர மார்க்க வருஷம் 845-ல், அல்லது, கலி 2593-க்குச் சரியான, நந்தந வருஷத்தில், மலையாளத்தில், காலடியில், அவதரித்த ஸ்ரீ சங்கர பூஜ்ய பகவத் பாத ஆசாரிய ஸ்வாமிகள், அதி கெம்பீர மான வாக்கியாமிருதம் அமைந்த, பாஷ்பம் என்னும் வியாக்யாநம் இயற்றியிருக்கின்றார்கள். இந்தப் பாஷ்யத்தின் மீது,பத்ம பாத ஆசாரியர் என்பவர், பஞ்ச பாதிகை என்று ஒரு வியாக்யாநம் இயற்றியிருக்கின்றனர். பஞ்ச பாதிகையின் மீது, பிரகாச ஆத்ம யதி என்பவர், விவரணம் என்று ஒரு வியாக்யாநம் இயற்றியிருக்கின்றனர். விவரணத்தின் மீது, அகண்டாநந்த முநி என்பவர், தத்வ தீபநம் என்று ஒரு வியாக்யாநம் இயற்றியிருக்கின்றனர். விவரணத்தின் மீது.நரசிம்ம ஆசிரம முநி என்பவர், பாவப் பிரகாசம் என்று ஒரு வியாக்யாநம் இயற்றியிருக்கின்றனர். சங்கர பாஷ்யத்தின் மீது. வாசஸ்பதி மிசிரர் என்பவர், பாமதி என்று ஒரு வியாக்யாநம் இயற்றியிருக்கின்றனர். பா ம தி யி ன் மீது, அமலாநந்த சரஸ்வதி என்பவர், கல்ப்ப தரு என்று ஒரு வியாக்யாநம் இயற்றியிருக்கின்றனர். கல்ப்ப தருவின் மீது, அப்பய்ய தீக்ஷிதர் என்பவர், பரிமளம் என்று ஒரு வியாக்யாநம் இயற்றியிருக்கின்றனர். சங்கர பாஷ்யத்தின் மீது, கோவிந்தாநந்த சுவாமி என்பவர். ரத்நப் பிரபை என்று ஒரு வியாக்யாநமும், சுத்தாநந்த சுவாமியின் சிஷ்யர் ஆநந்தகிரி என்பவர், நியாய நிர்ணயம் என்று ஒரு வியாக்யாநமும், இயற்றியிருக்கிறனர்.

இந்தச் சூத்திரங்களின் மீது, கிருஷ்ணாநந்த சரஸ்வதி என்பவர். சித்தாந்த சித்தாஞ்சநம் என்று, மிக விரி வான ஒரு வியாக்யாநமும், அப்பய்ய தீக்ஷிதர் என்பவர். நியாய ரக்ஷா மணி என்று. விரி வான ஒரு வியாக்யாநமும், பாரதி தீர்த்த முநி என்பவர் நியாய மாலை என்று, சுலோகமும், வியாக்யாநமு மான வசநமும், உள்ள, ஒரு வியாக்யாநமும். ஆநந்தாத்ம சுவாமிகள் சிஷ்யர் சங்கராநந்த சுவாமிகள் என்பவர், தீபிகை என்று ஒரு வியாக்யாநமும், ராமாநந்த சரஸ்வதி என்பவர், பிரஹ்மாமிர்த வர்ஷிணி என்று. ஒரு விருத்தி ரூப வியாக்யாநமும், பரசிவேந்திர சரஸ்வதி சிஷ்யர், சதா சிவேந்திர சரஸ்வதி என்பவர், பிரஹ்ம தத்வப் பிரகாசிகை என்று, ஒரு விருத்தி ரூப வியாக்யாநமும், அநுபவாநந்த சுவாமி சிஷ்யர், அமலாநந்த சுவாமி என்பவர், சாஸ்த்ர தர்ப்பணம் என்று, ஒரு விருத்தி ரூப வியாக்யாநமும்,

